RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s191

# தமிழ் பழமொழியும், பண்பாடும்

**தி. பார்த்திபன்** [அ, *]

[அ] மெய்யியல்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010, தமிழ்நாடு, இந்தியா

# Tamil Proverbs and Culture

**T. Parthiban** [a, *]

[a] Department of Philosophy, Tamil University, Thanjavur-613010, Tamil Nadu, India

* Corresponding Author: drparthiban1980@gmail.com

Received: 17-07-2022
Revised: 20-09-2022
Accepted: 02-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

There are proverbs in all the languages of the world. Proverbs that have been in use from time immemorial to the present day serve as a mirror to the cultural code of the people. In ancient times, proverbs were the basis for making people live ethically. Through these proverbs, the morality, morality, culture, and life of the people of the community can be clearly understood. The Tamil language is the repository of culture and a mine of knowledge, and a closer examination of Tamil literature reveals that proverbs are deeply embedded in the symbolism of many cultures. All the proverbs in the Tamil language are a beacon of light that expresses the culture. Moreover, the purpose of this study is to demonstrate to the present-day student community the values of philosophy, culture, life, and morality contained in these proverbs.

**Keywords:** Philosophy, Values, Ethics, Morality, Insol, Patar, Harmony, Proverb, Life, Culture

## முன்னுரை

சமூகப் பண்புகளுள் ஒழுக்கமே தலைச்சிறந்து விளங்குகிறது இக் கருத்தைத் திருவள்ளுவர் அருளிய உலகப் பொதுமறை என்னும் திருக்குறளில், மிகச் சிறப்பாக ஒழுக்கத்தின் மேன்மையைக் ஒழுக்கம் உடைமை (நன்னெறி நிற்றல்) அதிகாரத்தில்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்" குறள் 131

என்னும் குறளின் மூலம் நற்பண்பு எல்லார்க்கும் சிறப்பினைத் தருதலால் ஒழுக்கம் உயிரைவிடச் சிறந்ததாகப் பாதுகாக்கப் பெறும். தவறான பழக்கங்களால் உடலும், உள்ளமும், நோயுற்று உயிர் பிரிந்துவிடும், எனவே ஒழுக்கத்தை உயிரினும் சிறந்ததாகக் கருதிப் பாதுகாக்கவேண்டும் என வலியுறுத்துகிறார் (Ramalingam, 2022).

சமுதாயத்தில் ஒவ்வொருவரும் உயர்ந்த எண்ணங்களுடனும், சிறந்த கொள்கைகளுடனும் வாழவேண்டும் என்பதே பண்பாட்டின் அடிப்படை நோக்கமாகும். பண்பாடு என்பது பண்பட்ட, பக்குவப்பட்ட, சீரான, நேர்மையான வழியில் செல்லும் ஒழுக்கவியல் கோட்பாடாகும். இதனைப் பின்பற்றும் மனிதனின் நடத்தையில் உயர்வையும், பொறுமையையும், மாற்றத்தையும், தரக்கூடியது ஒழுக்கப் பண்பாடாகும்.

ஒவ்வொரு சமுதாயத்துக்கும் குறிப்பிட்ட பண்பாட்டு இயல்புகள் உள்ளன. அவை காலங்காலமாகப் பின்பற்றப்படும் மரபுகள், சமூக நல்லிணக்கக் கொள்கைகள், பழக்கவழக்கங்கள், கற்றல் நிலைகள் ஆகியவை வேறுபட்டு இருந்தாலும் அச்சமூகத்தினரால் சொல்லப்படும் பழமொழிகள் அனைத்தும் சமூக மக்களின் ஒன்றுபட்ட பண்பினை எடுத்துக்காட்டுகிறது. அதாவது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல. தமிழ் மொழியில் உள்ள அவ்வையாரின் நீதி நூல்களான ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் ஆகியவற்றில் மனிதன் செய்யக்கூடியது, செய்யக்கூடாதது என வரிசைப்படுத்திக் காட்டியுள்ளார், இவைகள் அனைத்தும் இச்சமூகப் பண்பாடு மற்றும் நேர்மையான வாழ்க்கை முறையை எடுத்துக்காட்டுகின்ற ஒன்றாகப் பழமொழிகள் உள்ளன.

பழமொழிகள் அனைத்தும் நம் முன்னோர்களின் வாழ்க்கை அனுப வார்த்தைகள், ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது என்பது போல, படித்து புரிந்துக்கொள்வதை விட பழகிப் புரிந்துக்கொள்வது மிகச் சிறந்த அறிவாகும். நம் முன்னோர்கள் தான் பெற்ற அனுபவ அறிவின் மூலம் தனது சமூகத்தை நல்வழிப்படுத்த வேண்டும், என்ற உயர்ந்த நோக்கில் பழமொழியாகச் சொல்லியுள்ளார்கள். மூத்தோர் சொல் முது நெல்லிக்கனி முன்னே கசக்கும் பின்னே இனிக்கும் என்பது போல, தனிமனித மேன்மைக்கும், குடும்ப மேன்மைக்கும், சமூக மேன்மைக்கும் பழமொழிகள் ஒரு தூண்டுகோலாக இருக்கும். எனவே இப்பழமொழிகள் மூலம் பண்பாடு, ஒழுக்கம், அறம், அன்பு, தானம், தவம், மனிதநேயம் போன்ற விழுமியங்கள் (Valus) அனைத்தையும், இன்றைய இளைய சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்ல மிக எளிய வழியாக அமைந்துள்ளது.

## பழமொழி

பழமொழிகள் என்பது ஒழுக்கம் மற்றும் பண்பாட்டை வெளிப்படுத்தும் ஒரு குறியீடாக அமைந்துள்ளது. பழமொழி மற்றும் பொன்மொழி இரண்டுக்கும் வேறுபாடு உண்டு, அதாவது பொன்மொழி என்பது உயர்ந்த சிந்தனை, கருத்தை, தத்துவத்தைச் சொல்வது. பழமொழிகள் என்பது உயர்ந்த பண்பாட்டை எளிமையாக்கி வலியுறுத்துவது. பழமொழியிலும் எதுகை, மோனை நயங்கள் உள்ளதால் அவை கேட்போர் மனதில் ஆழமாகப் பதிந்துவிடுகின்றது. சான்றாக நினைவாற்றலைக் குறிக்கையில் பசுமரத்து ஆணிபோல் என்ற பழமொழி நமக்கு நினைவுக்கு வருகின்றது.

நமது பண்பாட்டுக்குச் சிறப்பு சேர்ப்பது, முதியோர்களை மதித்தல் என்னும் பண்பாடாகும். முதியோர்கள் இருக்கும் வீட்டில் கலகம் ஏற்படாது, குடும்பம் ஒற்றுமையுடன் இருக்கும், இளையவர்கள் தவறான பாதையில் செல்கிறார் என்று தெரிந்தவுடன் கண்டித்துத் திருந்திவாழ வழிகாட்டுவார்கள். முதியோர்கள் வீட்டின் நூலகம் என்பதால் சிறுவர்களுக்கு அறச்சிந்தனைகளையும், நீதிக் கதைகளையும் சொல்லிக் கொடுப்பார்கள் அதனால், இளமையில் நற்பண்புகள் வளரும். பிறர்க்கு விட்டுக்கொடுத்தல், உதவிசெய்தல், அனைவரிடமும் அன்பு செலுத்துதல், பகுத்து உண்ணுதல் போன்ற உயர்ந்த விழுமியங்கள் அவர்களிடம் தோன்றும். இந்த சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் எதிர்காலத்தில் நல்ல பண்பாட்டை உடைய சமுதாயத்தை உருவாக்கமுடியும்.

இக் கருத்தை அவ்வையாரின் கொன்றைவேந்தன் மிக அழகாக எடுத்துக்காட்டுகின்றது, மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என்கிறது. கல்வி கேள்விகளில் முதிர்ந்த சான்றோர் சொன்ன சொல், தக்க சமயத்தில் அமிழ்தமாக உயிரைக்காக்கும் என்பது உண்மை. பிறருக்கு உதவி செய்யவேண்டும் என்ற பண்பாட்டை பழுத்தமரமும் செழித்தசெல்வமும் பசியாற்றவே என்ற பழமொழி நமக்கு மிக அருமையாக எடுத்துக்காட்டுகின்றன. அதாவது பழுத்தமரம் தன்னிடம் உள்ள பழங்களை எவ்வாறு பறவைகளுக்கும், மனிதர்களும் உண்டு மகிழ உதவி செய்வதுபோல், நிறைய செல்வம் உள்ளவர்கள் பொருள் இல்லாத ஏழைகளுக்கு உணவோ, பொருளோ கொடுத்து உதவி செய்யவேண்டும் என்ற பண்பை உணர்த்துகின்றன. இச் சிந்தனையை அவ்வையாரின் நல்வழி மிக அழகாகச் சொல்கிறது

"ஆறிடும் மேடும் மடுவும்போலாம் செல்வம்

மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறிடுந்

தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக

உண்ணீர்மை வீறும் உயர்ந்து"

உலகில் வாழும் மக்களே, ஆற்று வெள்ளத்தினால் மேடும் பள்ளமும் அவ்வப்போது உண்டாகும். அது போலச் செல்வமானது வளர்வதும், தேய்வதுமாகவே இருக்கும், நிலைத்திருக்காது. ஆகவே செல்வம் உள்ளபோதே இரந்து கேட்கும் ஏழைகளுக்குக் கொடுத்து உதவுங்கள். தாகத்திற்குத் தண்ணீர் கொடுங்கள் இந்த அறச்செயலே உயிருக்கு உற்ற துணையாக இருந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை (Venkatasami nattar, 2008).

விருந்தோம்பலின் பண்பை அன்போடு அளிக்கும் கஞ்சி, அறுசுவை உணவை மிஞ்சும் என்ற பழமொழி விளக்குகிறது. மேலும் இக்கருத்தைக் காஞ்சி மகாபெரியவர் ஒப்புடனே முகமலர்ந்து உபசரித்து உண்மைபேசி உப்பில்லா கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும் என்று மிக அழகாக விருந்தோம்பலின் சிறப்பை இவ்வாறு குறிப்பிடுகிறார். பகைவராக இருந்தாலும் நம் இல்லம் தேடி வந்தபின் இன்முகத்துடன், இன்சொல் சொல்லி வரவேற்று, அன்போடு உணவு அளித்தல் வேண்டும். அப்படி அளிக்கும் உணவில் குறைகள் இருப்பினும் அன்பு என்ற உணர்வு கலக்கும்போது அது அமிர்தமாக இனிக்கும் என்று விளக்குகிறது. மேலும் தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான், முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், உப்பிட்டவரை உள்ளளவும் நினை, போன்ற பழமொழிகள் நல்லெண்ணம் கொண்டு, அறநெறியில் வாழவேண்டியதன் தேவையை எடுத்துரைக்கின்றன (Chinnasamy, 2016).

## பண்பாடு

பண்பாடு உயிருக்கு இணையானது. இப்பண்பாடு மக்களின் அகவளர்ச்சியாகும். மக்கள் மனதில் தோன்றி ஒளிர்கின்ற உயர் குணங்களின் தொகுப்பாகும். மனித வாழ்வில் புற வளர்ச்சிக்கிடையே அகவளர்ச்சியாகிய ஒழுக்கம், பணிவு, வாய்மை தூய்மை, இரக்கம் மனிதநேயம் முதலான அகவளர்ச்சிக் கூறுகளின் செயல்பாடே பண்பாடு எனலாம். இச்சிந்தனையை மாதானுபங்கி என்று அழைக்கப்படும் திருவள்ளுவர் முப்பால் நூலில் பண்புடைமையில்

"பண்புஉடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்

மண்புக்கு மாய்வது மன்"

பண்புடையார் வழி நடத்தலின் உலகம் நிலை பெறுகிறது, இல்லை என்றால் மண்ணுள் மடிந்து போயிருக்கும் என்று வலியுறுத்துகிறார் (Ramalingam, 2022). தம்மிடம் பிறர் அன்பு காட்டவேண்டும் என்று நினைப்பதுபோல், தாமும் பிறரிடம் அன்பு செலுத்த வேண்டும் என்ற இரக்க உணர்வே மனிதநேயத்திற்கு அடிப்படையாகும். இத்தகைய மனப்பக்குவம் கொண்டவரையே பண்பாடுடையோர் எனப் போற்றுவர். இனம், மொழி, சமயம் ஆகியவற்றைக் கடந்து ஒவ்வொருவரும் பிறரிடம் அன்பு செலுத்த வேண்டும் என்ற உயரிய மனிதநேயப் பண்பும், பொதுமையை வரவேற்கும் பண்பும், பண்பாட்டுக்கு மேலும் சிறப்பைத் தருகின்றன. தலைமுறை தலைமுறையாக ஒரு சமுதாயத்தினரிடையே உள்ள உயரியப் பண்புகள் அடுத்த சமுதாயத்துக்குக் கொண்டு செல்வது பண்பாடு ஆகும்.

பழமொழிகள் மக்கள் வாழ்க்கையோடு பின்னி பிணைந்துள்ளது, அதாவது நகமும் சதையும் என்பதுபோல் அமைந்துள்ளன. உண்பதற்குமுன் இலையில் உப்பு இடுவது உண்ட வீட்டுக்கு இரண்டகம் (தீங்கு) செய்யக்கூடாது என்பதை உணர்த்துவதற்கே உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்னும் பழமொழி தோன்றியாது. மேலும் சோற்றுக்குமுன் உப்பு, பேச்சுக்குமுன் பழமொழி என்பது பழங்கால வழக்கில் இருந்தது. அக்காலத்தில், கிராமங்களில் ஊர்த்தலைவர் பஞ்சாயத்துகளில் பழமொழியைச் சொல்லிவிட்டுதான் வழக்கு பற்றி ஆராய்வர். அண்ணன், தம்பிக்குள் ஏதேனும் வழக்கு வந்தால் ஆராய்வதற்கு முன் கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பால் ஒன்றும் செய்ய முடியாது என்ற பழமொழியைச் சொல்வார்கள். அதாவது சமுதாயத்தில் அண்ணன், தம்பிக்குள் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தி போட்டி பொறாமை இன்றி ஒற்றுமையுடன், விட்டுக்கொடுத்து வாழ்வதற்கு வழிகாட்டுகிறது (Chinnasamy, 2016).

இவ்வாறு பழமொழிகள் சமூக ஒற்றுமை, பண்பாட்டு மேன்மை, அறநெறி சிந்தனை, ஆகியவை வளர்வதற்கு இணைப்பு பாலமாகத் திகழ்கின்றன. மேலும் இச்சிந்தனையை ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒரு கை ஓசை வராது, ஊர்கூடி தேர் இழுத்தல் போன்ற பழமொழிகள் உணர்த்துகின்றன. இவைகள் அனைத்தும் தனிமனித மேம்பாடு, சமூக ஒற்றுமை, பண்பாட்டு உயர்வினை வலியுறுத்துகின்றன.

## பழமொழியும் பண்பாடும்

சமுதாயத்தில் மக்கள் நற்பண்புகளுடன் வாழவேண்டும் என்பதைக் காட்டுவதுதான் பழமொழிகள். கிரேக்கத் தத்துவ ஞானியான சாக்ரடிஸ் நல்லொழுக்க நற்பண்பு (Virtue) என்பது ஒரு வகையான உயர்நிலை அறிவுடமை என்று கூறுகிறார். அவருக்குப்பின் வந்த அரிஸ்டாட்டில் நல்லொழுக்க நற்பண்பு என்பது நல்ல பழக்கங்களை நமது வாழ்வில் நிலையாகக் கடைப்பிடித்து ஒழுகுவதே என்று கூறுகிறார். அதாவது நல்ல பழக்கங்களைக் கண்டறிந்து நிலையாகக் கடைப்பிடித்து வாழ்வது.

ஒரு மனிதனின் அகநிலை அறப்பண்புகள் அனைத்தும் அவன் நடத்தையில் வெளிப்படுகின்றன. இதைத்தான் நம் முன்னோர் அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற இப்பழமொழி அகப்பண்பை உணர்த்துகின்றது. அகநிலை அறப்பண்பை அடிப்படையாகக் கொண்டு, மனிதன் படிப்படியாக மாறிக்கொண்டே வந்து ஒரு நிலையான தன்மையைப் பெற்றுவிடுகிறான். இதனையே பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் உடல் வளர்ச்சி மட்டும் வளர்ச்சியல்ல உடலோடு சேர்ந்து அறிவும் வளர்வதுதான் முழுமையான வளர்ச்சி, அப்போதுதான் சிறந்த பண்பாட்டு அறநெறியாளனாக திகழமுடியும் என்பதை ஆளும் வளரனும் அறிவும் வளரனும், அதுதாண்டா வளர்ச்சி என்ற பாடல் மூலம் மிக அழகாக விளக்குகிறார் (Chinnasamy, 2016).

பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவது முதலில் நல்லப் பழக்கங்களையும், பண்பாட்டையும் வளர்த்துக்கொள்ள. இளமையில் நற்பண்புகள் வளர்ந்தால் மற்ற அனைத்தும் தானாகவே வளர்த்துக்கொள்வார்கள், அதன் காரணமாக கல்வி, வேலை, வீடு, சமுகம், நாடு ஆகிய அனைத்து நிலையிலும் அறப்பண்பு உடையவராக சிறந்து விளங்குவார்கள், இதனை விளைந்த நெல் வணங்கி நிற்கும், பதர் நிமிர்ந்து நிற்கும் என்ற பழமொழியின் மூலம் அறியமுடிகிறது. அதாவது சமுதாயத்தில் விளைந்த நெல் போன்றவர்கள் பண்புள்ளவர்கள், பண்பில்லாதவர்களை எதற்கும் பயன்படாத பதர் போன்றவர்கள் என சமூகப் பண்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.

பழமொழிகள் பண்பாடு மற்றும் அறநெறி சார்ந்த வாழ்வியலையும், இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையினையும் மிக எளிமையாக எடுத்துக் கூறுகிறது, இதனை உணவே மருந்து, மருந்தே உணவு, என்றும் கந்தையாக இருந்தாலும் கசக்கிக்கட்டு, கூழானாலும் குளித்துக்குடி, சிறுதுளி பெருவெள்ளம் போன்ற பழமொழிகள் மனிதர்களின் புறவாழ்க்கை பண்பாடான தூய்மை, உணவு, ஆடை, மருத்துவம், இயற்கை, சேமிப்பு பழக்கம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன.

பழமொழிகள் அனைத்தும் மனிதனின் அகம், புறம் சார்ந்த ஒட்டுமொத்த பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றன. எனவே பழமொழிகள் அனைத்தும் வாழ்வியல் விழுமியங்கள் (Valus), இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்க்கை நெறியை உணர்த்துகிறது. பழமொழிகள் காட்டும் மெய்யியலை புரிந்து வாழ்ந்தால் மனதில் அமைதியும், மகிழ்ச்சியும் ஏற்பட்டு நீண்டநாள் வாழலாம். இக்கருத்தை வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்ற பழமொழி நமக்கு உணர்த்துகிறது (Chinnasamy, 2016).

## முடிவுரை

இன்றைய இளைஞர்கள் சிறந்த குடிமக்களாக விளங்குவதற்குப் பழமொழிகள் வழிகாட்டுகிறது. மேலும் பண்புள்ளவர்களாக, நாட்டுப்பற்று உள்ளவர்களாக, உயர்ந்தோர்களைப் போற்றி வணங்கும்

பண்புள்ளவராக, வாழ வேண்டும் என்னும் குறிக்கோளுடனும் மனிதனைச் சான்றோனாக்கும் விதமாகப் பழமொழிகள் விளங்குகின்றன. மக்களிடையே நற்பண்பை வலியுறுத்துவதற்காகவே திருக்குறள், நாலடியார், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்ற அற இலக்கியங்களும், இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களும் பகவத்கீதை போன்ற தத்துவ நூல்களும் தோன்றின. நம்முடைய பண்பாடு அறநெறி சார்ந்த பண்பாடாகும். அறக் கோட்பாட்டை போற்றும் சமுதாயமே உயர்ந்த சமுதாயம். தனி மனித ஒழுக்கம், பொதுவாழ்வில் தூய்மை போன்ற உயர்ந்த அறப் பண்புகள் இன்றைய உலகின் தேவை. அறநெறி அடிப்படையில்தான் மனுநீதி சோழன் முதல் மகாத்மா காந்தி, காமராசர் வரையில், ஆட்சியும், அரசும், நீதியும், தண்டனையும் அறநெறி தழுவியே வழங்கப்பட்டது. இவ்வாறு மேன்மை தங்கிய உயர்ந்தோர் வாழ்ந்த நாடு இச் சிறப்புப்பெற்ற நாட்டில், இன்றைய இளைஞர்களின் செயலும், சிந்தனையும், அறம் என்றால் என்ன, அது எங்கே கிடைக்கும் என்று கேட்கின்ற நிலையில் உள்ளார்கள். பள்ளி முதல் பல்கலைக்கழகங்கள் வரையில் எந்த துறையில் பயின்றாலும் அதாவது மருத்துவம், பொறியியல், தொழிற்கல்வி, கலை அறிவியல், போன்ற அனைத்து துறை மாணவர்களுக்கும் சமயம் சார்ந்த, அறநெறி கல்வியினை அவசியம் சொல்லிதரவேண்டும். மாணவர்கள் தங்களை முதலில் புரிந்து கொள்ளவும், சமுதாயத்தில் நல்லுறவை வளர்த்துக்கொள்ளவும் அறிவியல் தேவைப்படுகிறது. எனவே அறம் இல்லா வாழ்க்கை துடுப்பு இல்லா படகு போன்றதாகும்

## References


Chinnasamy, T.P. (2016) Avvaiya

rin Needhi Noolkal, Swamimalai Pathippagam, Chennai, India.

Ramalingam, Aranga. (2022) Thirukkural, Varththamaan Pathippagam, Chennai, India.

Venkatasami nattar, N.M. (2008) Nalvali, Ramaiya pathipagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License